தமிழக சட்டப் பேரவை.

புதன்கிழமை, 1968 மார்ச் 27.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினுக்கள்-விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினக்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வின எண்கள் 322-இலிருந்து 326 வரை ஒத்திவைக்கப்படுகின்றன.

நத்தத்தில் கடலை எண்ணெய் ஆலை

* 338 வினு—**திரு. பெ. மலைச்சாமி** : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் வட்டம் நத்தத்தில் கடலை எண்ணெய் ஆலை ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கடலை எண்ணெய் ஆலை நிறுவும் செயற்குறிப்பு எதுவும் அரசாங்கத்திடம் இல்லை.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, இந்தப் பகுதிகளில் புன்செய் நிலங்கள் அதிகமாக இருப்பதால் நிலக்கடலை உற்பத்தி இந்த மாவட்டத்திலே அதிகமாக இருக்கிறது. எனவே, பெரிய ஆலை ஒன்று நிறுவாவிட்டாலும் சிறிய ஆலையை நிறுவுவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அரசாங்கத்தின் தரப்பில் எண்ணெய் ஆலை எதுவும் வைக்கப்படவில்லை. தனியார் தான் நடத்தி வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போல் எண்ணெய் ஆலை வைப்பதற்கு யாராவது முன்வருவார்களேயானால் அதற்கான ஆதரவு தர அரசு முயலலாம். அதற்கு லைசென்ஸ் எடுக்கவேண்டிய அவசியம் இல்லை. ஆகவே, தனியார் யாராவது முன்வருவார்களேயானால் தக்க ஆதரவு அரசு தரலாம்.

திரு. பி. எஸ். மணியன் : சில இடங்களில் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக இத்தகைய எண்ணெய் பிழியும் ஆலைகள் அமைக்கப் பட்டு நல்லவிதமாக செயல்பட்டு வருகின்றன. ஆகவே, கூட்டுறவு சங்கங்கள் மூலமாக இத்தகைய ஆலைகளை நிறுவுவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கூட்டுறவு முறையில் ஆரம்பிப்பதற்கு ஆங்காங்கே உள்ளவர்கள் முயற்சி செய்வார்களேயானால், அதற்குத் தக்க முயற்சி செய்யலாம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, வனஸ்பதி தயாரிப்பதற்கு கடலை எண்ணெய் உபயோகப்படுகிறது. நாட்டிலே வனஸ்பதி மிக அதிகமாக உபயோகப்படுகிற காரணத்தால் எண்ணெய் ஆலையைத் தொடங்குவதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அப்படிப்பட்ட உத்தேசம் இப்போது இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, காட்பாடியிலே ஒரு எண்ணெய் ஆலை ஆரம்பிப்பதற்காக 10 லட்சம் ரூபாய் கடன் கொடுக்கப்பட்டும், பத்து ஆண்டுகளாகியும் இன்னும் நடைபெறுமல் இருக்கிறது. கொடுத்த கடன் திருப்பி வாங்கப் பட்டதா இல்லையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மேலூர் பற்றியது மூலக்கேள்வி. தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கப்படும்.

திரு. எம். சண்முகம் : தென் ஆர்க்காடு மாவட்டத்தில் வனஸ்பதி தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு பத்து ஆண்டுகளுக்கு மேலாகியும் துவக்கப்படவில்லை. தனியார் துறையிலே ஆரம்பிக்கப்படாமல் இருக்கிறது. அரசாங்கமே அதற்கு 15 இலட்சம் கடன் கொடுத்தும் வசூல் ஆகாமல் இருக்கிறது. ஆகையால், அரசாங்கம் அந்தத் தொழிற்சாலையை ஏற்று நடத்துவதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால், விவரம் அறிந்து பதிலளிக்கலாம்.

திருச்செந்தூர் வட்டத்தில் காகித உற்பத்தி ஆலை

* 339 வினா.—திரு. டி. மார்டின் : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டத்தில் திருச்செந்தூர் தாலுக்காவிலுள்ள சாத்தான்குளத்திலும், பரமன்குறிச்சியிலும் பேப்பர் தொழிற்சாலை மாநில சர்க்காரின் பொறுப்பில் ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : சார், திருநெல்வேலி மாவட்டத்திலே சாத்தாங்குளம் பகுதியிலே, கன்னியாகுமரி குலசேகரம் பகுதியிலே தொழில்கள் எதுவும் இல்லாமல் மிகவும் பிற்பட்ட பகுதியாக இருக்கின்றன. அங்கே பேப்பர் தொழிற்சாலை